**கவனிக்க**.- *15.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I: *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1764 - 2012 ජූනි මස 22 වැනි සිකුරාදා - 2012.06.22

*1764 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி* IV*(அ)* - *மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 985 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | 982 | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆணடு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

***1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் IV ஆம் பகுதி 32(1) பிரிவின்கீழ் வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட்ட நியமனங்கள்***

| *தொடர் இல.* | *பெயர்/சேவை/வகுப்பு/தரம்* | *நியமனம் செய்யப்பட்ட பதவி/அலுவலகம்/ நடைமுறைப்படுத்தப்படும் திகதி* |
|---|---|---|
| 1 | திரு. ஆர். எம். டபிள்யூ. எஸ். சமரதிவாகர, இ. நி. சே., I ஆம் வகுப்பு | 2012.01.05 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் பயிற்சி நிறுவனத்தில் பணிப்பாளர் பதவிக்காக |
| 2 | திரு. பி. ஜே. ஆர். ஏ. டபிள்யூ. சி. ரணசிங்ஹ, இ. நி. சே., I ஆம் வகுப்பு | 2012.01.04 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக் களத்தில் பிரதி மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதவிக்காக |
| 3 | செல்வி பி. டீ. எஸ். கே. குணபால, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.06 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் பிரதான செயலாளர் அலுவலகத்தில் உதவி பிரதான செயலாளர் உதவி (பயிற்சி) பதவிக்காக |
| 4 | செல்வி எச். எம். டீ. எஸ். விஜேரத்ன, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.04 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் உள்ளூராட்சி திணைக்களத்தில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவிக்காக |
| 5 | செல்வி எச். எஸ். சீ. எல். சந்தரத்ன, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.04 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் விவசாய, மிருக உற்பத்தியும் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனமும் விவசாய அபிவிருத்தி அமைச்சின் உதவி செயலாளர் பதவிக்காக |
| 6 | திருமதி எம். ஏ. எம். பியசேன, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.04 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவில் உதவி செயலாளர் பதவிக்காக |
| 7 | திருமதி டபிள்யூ. எம். என். பி. புத்ததாச, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.06 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் பிரதான செயலாளர் அலுவலகத்தில் உதவி பிரதான செயலாளர் (நிருவாக) இலங்கை நிருவாக சேவை II ஆம் வகுப்பு பதவியில் முழு கால நேரமும் வேலை பார்ப்பதற்காக |
| 8 | திருமதி ஜீ. ஜீ. டீ. குணசிங்ஹ , இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.06 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் பிரதான செயலாளர் அலுவலகத்தில் உதவி பிரதான செயலாளர் (நிருவாக) பதவிக்காக |
| 9 | திருமதி நிலுகா கே. ஜயவர்தன, , இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.04 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக் களத்தில் உதவி மாகாண காணி ஆணையாளர் பதவிக்காக |

| தொடர் இல. | பெயர்/சேவை/வகுப்பு/தரம் | நியமனம் செய்யப்பட்ட பதவி/அலுவலகம்/ நடைமுறைப்படுத்தப்படும் திகதி |
|---|---|---|
| 10 | திரு. ரி. பீ. விக்ரமசிங்ஹ, இ. நி. சே., I ஆம் வகுப்பு | 2012.01.12 ஆந் திகதி தொடக்கம் வடமேல் மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக் களத்தில் மாகாண பணிப்பாளர் பதவிக்காக |
| 11 | திருமதி ஆர். எம். எஸ். எச். ராஜபக்ஷ , இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.01.23 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண ஆளுநரது அலுவலகத்தில் உதவி செயலாளர் பதவிக்காக |
| 12 | திரு. ரி. பீ. விக்ரமசிங்ஹ , இ. நி. சே., I ஆம் வகுப்பு | 2012.02.03 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண நன்னடத்தையும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தில் மாகாண பணிப்பாளர் பதவிக்காக |
| 13 | திரு. எம். எச். எம். ரியால்தீன் , இ. நி. சே., I ஆம் வகுப்பு | 2012.02.03 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் மாகாண பணிப்பாளர் பதவிக்காக |
| 14 | திருமதி நிலுகா கே. ஜயவர்தன, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.03.29 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சின் உதவி செயலாளர் (இ. நி. சே. II ஆம் வகுப்பு) பதவியில் முழு கால நேரமும் வேலை பார்ப்பதற்காக |
| 15 | செல்வி டீ. எம். ஏ. எச். எம். டீ. டீ. உகுவெல, இ. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.03.20 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக் களத்தில் உதவி மாகாண காணி ஆணையாளர் பதவிக்காக |
| 16 | திரு. பீ. எம். யூ. சரத் குமார, இ. க. சே., III ஆம் வகுப்பு | 2011.12.13 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண விவசாய திணைக்களத்தில் கணக்காளர் பதவிக்காக |
| 17 | திரு. ஏ. எம். பி. அலஹகோன், இ. க. சே., II ஆம் வகுப்பு | 2012.02.13 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் கணக்காளர் பதவிக்காக |
| 18 | திரு. டபிள்யூ. ஏ. பி. வை. விஜேசிங்ஹ, இ. க. சே., III ஆம் வகுப்பு | 2012.02.13 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் இரண்டு நாள் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் சேவை யில் மேற்பார்வை செய்வதற்கு உடன்பட்டு, மாதம்பே சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் கணக்காளர் பதவிக்காக |

| தொடர் இல. | பெயர்/சேவை/வகுப்பு/தரம் | நியமனம் செய்யப்பட்ட பதவி/அலுவலகம்/ நடைமுறைப்படுத்தப்படும் திகதி |
|---|---|---|
| 19 | திரு. டீ. எம். கே. தசனாயக்க, இ. க. சே., II ஆம் வகுப்பு | 2012.03.29 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் தனது சட்டபூர்வ பதவிக்கு மேலதிகமாக வடமேல் மாகாண பாதைகள் அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பும், மீன்பிடி நடவடிக்கை அமைச்சில் கணக்காளர் பதவிக்காக |
| 20 | திருமதி டபிள்யூ. எம். ஆர். சி. குமாரி, இ. க. சே., II ஆம் வகுப்பு | 2012.04.10 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் குருநாகல் மாநகர சபையில் கணக்காளர் பதவிக்காக |
| 21 | திருமதி எல். எச். எம். ஜினாதரி, இ. வி. சே., II/II ஆம் வகுப்பு | 2012.03.01 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் தம்பதெனிய வளைய உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் உதவி விவசாய பணிப்பாளர் பதவிக்காக |
| 22 | திருமதி ஜீ. பி. மஹவிதானகே, இ. வி. சே., II/II ஆம் வகுப்பு | 2012.03.01 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் மாதம்பே வலய உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் உதவி விவசாய பணிப்பாளர் பதவிக்காக |
| 23 | திரு. ஜீ. எம். என். திலகரத்ன, இ. மி. சே., I ஆம் வகுப்பு | 2012.04.17 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் வடமேல் மாகாண மிருக உற்பத்தியும் சுகாதார திணைக்களத்தில் விடயம் சம்பந்தமான விசேடகர் பதவிக்காக |
| 24 | திரு. எச். எம். ஏ. பீ. ஹேரத் , இ. க. நி. சே., III ஆம் வகுப்பு | 2011.05.11 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் கிரிஉள்ள கல்வி அலுவலகத்தில் உதவி கல்வி பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிக்காக |
| 25 | திருமதி ஞானமாலி திவியாகஹகெதர, இ. க. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.02.23 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் இப்பாகமுவ கல்வி அலுவலகத்தில் உதவி கல்வி பணிப்பாளர் பதவிக்காக |
| 26 | திரு. ஏ. ஆர். பி. ஜயதிலக, இ. க. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.02.23 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் குருநாகல் கல்வி அலுவலகத்தில் உதவி கல்வி பணிப்பாளர் (கல்வி நிருவாக) பதவிக்காக |
| 27 | திரு. ஜே. எம். ரிகிரி பண்டா, இ. க. நி. சே., III ஆம் வகுப்பு | 2012.02.23 ஆந் திகதிய கடிதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் மாவத்தகம கோட்டா கல்வி அலுவலகத்தில் உதவி கல்வி பணிப்பாளர் பதவிக்காக |

கௌரவ ஆளுநர் கட்டளைப்படி,

என். பீ. எம். காரியவசம்,
ஆளுநரின் செயலாளர்,
வடமேல் மாகாணம்.

வடமேல் ஆளுநர் அலுவலகம்,
2012, மே மாதம்.

6-649

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமத்திய மாகாண அரச சேவையில் கிராம அபிவிருத்தி அதிகாரி (II ஆம் வகுப்பு) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 (2012)

வடமத்திய மாகாண அரச சேவையில் கிராம அபிவிருத்தி அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவி உயர்வு வழங்கும் நடைமுறைக்கேற்ப ஆட்சேர்ப்பு செய்யும் தினத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அனுமதியளிக்கப்பட்டுள்ள 8 வெற்றிடங்களை அல்லது கிட்டிய எண்ணிக்கையை நிரப்புவதற்காக வடமத்திய மாகாணத்தில் வதிவைக் கொண்ட மாகாண அரச சேவையில் உள்ள கீழ்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. **பதவிக்குரிய சம்பளத் திட்டம்**.- எம்என் 5-2006ஏ மாதாந்த சம்பளம் ரூபா 16,720 - 11 × 320 - 11 × 365 - 15 × 450 - ரூபா 30,685 ஆகும். இச்சம்பளத் திட்டத்தின் மூன்றாவது படிமுறைக்கு முன்னர் அதாவது ரூபா 17,680 இற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் தடைதாண்டலும், ஏழாவது சம்பளப் படிமுறைக்கு முன்னர் அதாவது ரூபா 18,960 இற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன் தடை தாண்டலும் உண்டு.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவு உள்ளது. தாபனக் கோவையின் II ஆவது அத்தியாயத்தில் 10 - 12 வரையான பந்திகள் பொருத்தமானது.

அரச சேவையிலுள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய அதிகாரியொருவர் தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரது பதவி ஒரு வருட பதில் கடமை புரியும் தகுதிகாண் காலத்திற்கு உட்படும். அரச சேவையிலுள்ள நன்னடத்தைக் காலத்திற்குரிய ஒருவராயின் 3 வருடங்கள் நன்னடத்தைக் காலத்துக்கு உட்பட வேண்டும்.

இப்பதவிக்குரிய வடமத்திய மாகாண அரச சேவையில் கிராம அபிவிருத்தி அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும் மற்றும் பதவி உயர்வு வழங்கும் முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைப் பிரமாணங்களுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள அறிவுறுத்தல்களுக்கும் பதவிக்குரிய சட்டதிட்டங்களுக்கும் அரசு அல்லது வடமத்திய மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் இடையிடையே வெளியிடப்படும் வேறு பிரமாணங்களுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் சகல அதிகாரிகளும் கட்டுப்பட வேண்டும்.

ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர் வடமத்திய மாகாண மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் 5 வருட காலத்திற்கு சேவையாற்றுவதற்கு உட்படுவதுடன் உள்ளக இடமாற்றத்திற்கும் கட்டுப்பட வேண்டும்.

3. **தேவையான தகைமைகள்**.- கல்வித் தகைமைகள் :

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் (4) அல்லது புதிய பாடத்திட்டத்தின்கீழ் 3 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை சமூக சேவைக் கல்லூரியில் சமூக வேலைகள் தொடர்பாக இரு வருட டிப்ளோமா சான்றிதழ் அல்லது இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் சமூக அபிவிருத்தி தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் அல்லது விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்ற பின் ஓர் அரச உத்தியோகத்தராக அல்லது அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தராக அல்லது மேற்கூறப்பட்டுள்ளவற்றில் ஏதாவதொன்றில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஈ) (i) நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சிரேஷ்ட பாடநெறிச் சான்றிதழ் பரீட்சையில் ;

அல்லது

(ii) 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் எண்கணிதம்/ கணிதம்/ பிரயோக கணிதம்/ வர்த்தக கணிதம் ஆகிய பாடங்களில் இரு பாடங்கள் உட்பட ஒரே அமர்வில் 5 பாடங்கள் உள்ளடங்கலாக இரு

அமர்வுகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில்/ தேசிய பொது கல்விச் சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து அரச உத்தியோகத்தராக அல்லது அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தராக இவற்றில் ஏதாவது ஒன்றில் தொடர்ச்சியாக பத்து வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பொதுத் தகைமைகள் :

(i) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல்.

(ii) ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் அரச சேவையாளர்கள் என்பதால் வயது எல்லை கட்டுப்பாடு கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(iii) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iv) வடமத்திய மாகாணத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வதிவைக் கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை :

(அ) இவ்வறிவித்தலில் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 9 வரையுள்ள விடயங்கள் முதற் பக்கத்திலும் இலக்கம் 10 தொடக்கம் 11 வரையான விடயங்கள் மறுபக்கத்திலும் மீதி மூன்றாவது பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2012.07.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, வடமத்திய மாகாணம், அனுராதபுரம்" என்ற முகவரிக்கு நீங்கள் சேவையாற்றும் நிறுவனத் தலைவரினதும், அமைச்சு செயலாளரினதும் சிபாரிசுடன் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிராம அபிவிருத்தி அதிகாரி (II ஆம் வகுப்பு) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 (2012)" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது உரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக குறிப்பிடுவதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத, பூரணமற்ற, திருத்தமான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பங்கள், தாமதமாக அனுப்பப்படுகின்ற மற்றும் குறிப்பிட்ட தினத்திற்குமுன் கிடைக்கப்பெறாத, பதிவுத்தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் காணாமல் போதல், தாமதமாகக் கிடைத்தல் போன்றவை தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. முன்வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

ஆட்சேர்ப்பு செய்யும் முறை :

(i) இதற்கான போட்டிப் பரீட்சை சிங்களம்/ தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலம் மாற்றம் செய்வதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சை அனுராதபுரத்தில் மாத்திரம் நடைபெறும்.

(iii) உளச்சார்பு.- (நேரம் : ஒரு மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.
சித்தி புள்ளி 40%. (இவ்வினாப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரியின் கணித அறிவு, தர்க்கிக்கும் திறன், பொது அறிவாற்றல் என்பவற்றை பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். எழுத்துப் பரீட்சையில் 40% புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(iv) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் கிராம அபிவிருத்தி அதிகாரி பதவியொன்றில் பதவி வகித்துள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் சுயவிபரக் கோவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் குழு ஒன்றின் மூலம் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டபின் சேவைக் காலத்திற்கு வருடமொன்றுக்கு 1 புள்ளி வீதம் உச்ச புள்ளியாக 10 புள்ளிகள் வழங்கப்படும்.

(v) இப்பரீட்சையானது, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினாலோ அல்லது வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினாலே நடாத்தப்படும். அதற்கேற்றவாறு அனுமதி அட்டை வழங்கப்படும்.

(vi) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்ட உடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களாகியும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற முறையில் அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பதிவுத்தபால் அனுப்பிய பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு உமது வேண்டுகோள் கடிதம் என்பவற்றை உங்களிடம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிப்பது பயனுள்ளதாக அமையும்.

(vii) இப்பரீட்சை நடாத்துவது தொடர்பாக மேற்கூறப்பட்ட பரீட்சையை நடாத்த அதிகாரம் பெற்றவரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர் கட்டுப்பட்டவராவார். அச்சட்டதிட்டங்கள் மீறப்படுகின்ற வேளையில் பரீட்சை ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். அத்துடன் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கும் உட்பட வேண்டியேற்படும்.

(viii) பரீட்சையின்போது பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(ix) பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

(x) பரீட்சார்த்தி ஒருவருக்கு வழங்கப்படும் அனுமதி அட்டையானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமான ரூபா 250 செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக் கட்டளை இணைக்கப்படக்கூடாது. வடமத்திய மாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி வழங்கப்படும். என்சி 100 என்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

7. **பொது விடயங்கள்**.- (i) இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கமைய ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரோ எந்த வேளையிலும் அவரது அபேட்சகத் தன்மை இரத்துச்செய்யப்படலாம்.

(ii) அவ்வாறே தெரிவுசெய்யப்பட்டு நியமனம் பெற்றதன்பின் அவர் வழங்கிய தகவல்கள் பிழையென தெரியவருமிடத்து அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

8. **தெரிவுசெய்யப்படும் முறை**.- (i) மேற்கூறப்பட்ட எழுத்து பரீட்சையில் சித்தியடைவதற்கு 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற வேண்டும். புள்ளிகளின் முன்னுரிமையை தீர்மானிக்கும்போது மேல் 5(iv) நியதிகளுக்கேற்ப வழங்கப்படும் புள்ளிகளையும் கூட்டி பெறப்படும் புள்ளிகளின் முன்னுரிமையின்படி அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 15/ 90 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையானது தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் உடற்தகைமையை பரீட்சிப்பதற்காக மட்டுமேயாகும்.

(ii) இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கேற்ப நடைபெறும்.

எஸ். எம். எஸ். தென்னகோன்,
செயலாளர்.

மாகாண அரசசேவை ஆணைக்குழு,
வடமத்திய மாகாணம்,
01.06.2012.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமத்திய மாகாண அரச சேவையில் கிராம அபிவிருத்தி அதிகாரி (II ஆம் வகுப்பு) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2011 (2012)**

**LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF RULAR DEVELOPMENT OFFICER (CLASS II) IN THE NORTH CENTRAL PROVINCIAL PUBLIC SERVICE - 2011 (2012)**

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2

(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) முதலெழுத்துக்களைப் பின்னால் குறிப்பிடவும் :---.

2. பெயர் (ஆங்கிலத்தில்) முதலெழுத்துக்களைப் பின்னால் குறிப்பிடவும் :---.
உதாரணம் : SUNIL, A.B

3. முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :---.

4. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :---.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

6. நிரந்தர முகவரி :-

(i) (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(ii) (ஆங்கிலத்தில்) :----.
(iii) தொலைபேசி இலக்கம் :

7. நிரந்தர வதிவிடம் :-

(i) வதியும் மாவட்டம் :----.
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(iii) கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

8. ஆண்/ பெண் தன்மை :

ஆண் - 0
பெண் - 1

(பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

9. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

10. கல்வித் தகைமைகள் :

(i) பட்டம் தொடர்பான விபரங்கள் :

(அ) பெற்றுள்ள பட்டம் :----.
(ஆ) பல்கலைக்கழகம் :----.
(இ) பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

(ii) க. பொ. த. (உயர் தரம்) :

| வருடம் | பரீட்சை சுட்டெண் | பாடங்களும் பெறப்பட்ட பெறுபேறுகளும் |
|---|---|---|
| | | |

(iii) க. பொ. த. (சாதாரண தரம்) :

| முதற் தடவை- வருடம் :<br>பரீட்சை சுட்டெண் : | | இரண்டாம் தடவை- வருடம் :<br>பரீட்சை சுட்டெண் : | |
|---|---|---|---|
| பாடம் | பெற்றுள்ள பெறுபேறு | பாடம் | பெற்றுள்ள பெறுபேறு |
| | | | |

(iv) டிப்ளோமா சான்றிதழ்-

(அ) பெற்றுள்ள டிப்ளோமா மற்றும் நிறுவனம் :----.
(ஆ) பாடப் பரப்பு :----.
(இ) செல்லுபடியாகும் திகதி :----.

(v) சேவைக்காலம் :----.

(vi) விண்ணப்பிப்பது இலக்கம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் எத்தகைமைகளின்கீழ் என்பது (உரிய சான்றிதழ் களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.) :-

11. அறிவித்தலின் 5 ஆவது பந்தியின் IV ஆவது சரத்தின்கீழ் கிராம அபிவிருத்தி அதிகாரி பதவியில் இணைந்து சேவையாற்றிய ருப்பின்-

சேவைக்காலம் :....................... வருடங்கள்

(................................. தொடக்கம் ................................... வரை)

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
பணம் செலுத்திய பிரதேச செயலகத்தின் பெயர் :----.

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும்.

(பற்றுச்சீட்டின் பிரதியை தாங்கள் வைத்துக்கொள்ளவும்)

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஆட்சேர்ப்பு செய்யும் அறிவித்தலுக்கேற்ப என்னடமுள்ள சான்றிதழ்/ ஆவணங்களின் அடிப்படையில் உண்மையானவை என்றும் திருத்தமானவை என்றும் உறுதியளிக்கின்றேன். இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கேற்ப என்னால் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சை விண்ணப்பம் இரத்துச்செய்யப்படலாம் என்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் சேவையிலிருந்து

நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் எனவும் உறுதியளிக்கின்றேன். மேலும் இப்பதவிக்கு நான் தேர்ந்தெடுக்கப்படின் மாகாணத்தினுள் குறிப்பிடப்படும் காலம் சேவையாற்றுவதற்கு இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(பெயர் :...............................................)

திகதி :----.

14. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................... என்பவரின் சுயவிபரக் கோவைக்கேற்ப மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் ................................ அலுவலகத்தில்/ நிறுவனத்தில் ...................................... ஆந் திகதியிலிருந்து ............................................ வரை ........................................ பதவியில் சேவையாற்றுகிறார் எனவும், அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் எனவும், இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு அவர் உரிய அறிவித்தலின் 3 ஆவது பந்தியின்படி தகைமை பெற்றுள்ளார் எனவும், அறிவித்தலின் 5 (iv) ஆவது பந்திக்கேற்ப தகைமை பெற்றுள்ளார்/ பெறவில்லை எனவும், அவரின் சேவை திருப்திகரமானது எனவும், இப்பரீட்சைப் பெறுபேறுகளுக்கேற்ப அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது எனவும், மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் அவரின் சுயவிபரக் கோவைக்கேற்ப சரியானதும் உண்மையானதும் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதற்குரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும், அவர் .................................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுபடுத்துகின்றேன். (பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

----,
அமைச்சு செயலாளரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-779

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.